உ
சிவமயம்

## பஞ்ச புராணம்

## தொகுப்பு 8

### தேவாரம்

தலம்: திருக்கழுமலம்

பண்: கொல்லி
இராகம்: நவறோஜ்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.·.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே.

### திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

### திருவிசைப்பா

சித்தனே அருளாய் செங்கணா அருளாய்
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே அருளாய் அமரனே அருளாய்
அமரர்கள் அதிபனே அருளாய்
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே அருளாய் முதல்வனே அருளாய்
முன்னவா துயர்கெடுத்து எனக்கே.



### திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம்முற்றும் எமக்கமுதாம்
எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர் அடியார்
அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்து
ஆண்டுகொண்டு ஆருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.

### திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னங்குடிப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்